**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 26 October 2021

# முன்னாள் உளவுத்துறை தலைவர் சுயசரிதை வெளியீடு




திரு போகார்ஸ் 1992ஆம் ஆண்டில் காலமானார். அவருக்கு அப்போது 65 வயது.

**படங்கள்: என்யுஎஸ், ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூரின் முன்னாள் உளவுத்துறை சிறப்புப் பிரிவுத் தலைவரான திரு ஜார்ஜ் இ. போகார்ஸின் சுயசரிதை நேற்று வெளியிடப்பட்டது. அந்த நூலை செய்தித்துறையில் பழுத்த அனுபவம் கொண்ட பெர்தா ஹென்சன் புனைந்துள்ளார். சிங்கப்பூரின் முன்னோடி அரசாங்க ஊழியர்களில் ஒருவரான திரு போகார்ஸ், ஜப்பானிய ஆட்சிக்குப் பிறகு உளவுத்துறையின் சிறப்புப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.

கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான ‘ஆப்பரேஷன் கோல்ட் ஸ்டோரில்’ அவரது பங்களிப்பு முக்கியமானது. சிங்கப்பூர் ஆயுதப் படையை அமைக்கவும் திரு போகார்ஸ் உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.